1978 செப்டம்பர் 11]

விடை—(அ) ஜனவரி 1971-ல் துவக்கப்பட்டு 1977-ஆம் ஆண்டு முடிவு பெற்றது.

(ஆ) 105.44 லட்ச ரூபாய்கள்.

(இ) 124.08 இலட்சம் ரூபாய்கள்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) தகவல் கோரல்.

(அ) அரைமணி விவாதம் குறித்து.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, பேரவை நிகழ்ச்சி நிரலில் 6-வது பாராவில் ஒரு பொருள் குறித்து ½ மணி நேரம் விவாதம் என்று ஒதுக்கப்பட்டு இருக்கிறது. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த நிகழ்ச்சி வருகிறபோது சொல்லுங்கள். ஏற்கனவே அது அனுமதித்தாகிவிட்டது. அந்த நிகழ்ச்சி எடுத்துக் கொள்ளப்படுகிறபோது அதன் மீது ஒழுங்குப் பிரச்னை அல்லது தங்களுடைய விளக்கம் தெரிவிக்கலாம். இப்போது தேவையில்லை.

(ஆ) ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, அருப்புக் கோட்டை தொகுதியில் காரியாபட்டி என்ற இடத்தில் அனைத்துக் கட்சிகளைச்சேர்ந்தவர்களும் சேர்ந்து 4—9—78-ல் இருந்து பஸ் விடவேண்டும் என்று கோரி போராட்டம் நடத்துவதால் அங்கே போக்குவரத்து பாதிக்கப்பட்டு மாணவர்கள் கல்லூரிக்குப் போகக் கூட முடியாத ஒரு பதட்டநிலை இருப்பதால், நான் 42-வது விதியின்கீழ் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு ஒரு நோட்டீஸ் கொடுத்து இருந்தேன், அது எப்போது எடுத்துக்கொள்ளப்படும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறுபடியும் திரு. சுப்பு அவர்கள் இந்தப் பிரச்னையை இங்கே எழுப்ப ஆரம்பித்து விட்டார். (குறுக்கீடு) தயவுசெய்து நான் அவர்களுக்குச்